(இ) சென்னை மாநகரில் போலீஸ் கமிஷனரால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மற்றொரு ஒற்றி வைப்புத் தீர்மானத்தை திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும், திரு. சோ. அழகர்சாமி அவர்களும் கொண்டுவருவதாக முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். சென்னை நகரத்திலே தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டால், அதைப் பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவரக்கூடாது என்று பல முறை இப்பேரவையிலே அளிக்கப்பட்ட தீர்ப்புகள் இருக்கின்றன. என்றாலும், ஒற்றிவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்ட காரியம் எப்படி நடைமுறை விதிக்கு உட்பட்டதாக இருக்கிறது என்பதைப்பற்றி மட்டும் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கூறலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பின்வரும் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அறிவிக்கை கொடுத்திருக்கிறேன்:—

"மேற்கு வங்கத்தில் கூட்டணி ஆட்சியை ஜனநாயகமற்ற முறையில் டிஸ்மிஸ் செய்திருப்பதைக் கண்டிக்க ஊர்வலம், ஆர்ப்பாட்டம் முதலியன நடத்துவதற்கு, நகரப் போலீஸ் சட்டம் 41-வது பிரிவின் கீழ் தடையுத்தரவு பிறப்பித்துள்ள சென்னை போலீஸ் கமிஷனரின் செயலைப்பற்றி இந்தச் சபையில் விவாதிக்க வேண்டும்."

மேற்கு வங்கத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய காங்கிரசல்லாத ஒரு அரசாங்கம், ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில், கலைக்கப்பட்டிருக்கக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில், அப்படிக் கலைக்கப்பட்டது சரியான செயலா, அல்லவா என்பதை எடுத்துச் சொல்லுவதற்குக்கூட உரிமை இல்லாத முறையில், இந்தச் சென்னை இராச்சிய சர்க்கார் மீது ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிற ரீதியில், போலீஸ் கமிஷனர் அவர்கள் இம்மாதிரியான ஒரு தடையுத்தரவைப் பிறப்பித்து, தடை விதித்திருப்பது ஜனநாயகத்திற்கு முரணானது என்பதை எடுத்துக் கூறுவதற்காகச் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி அரசினர் ஏதாவது தெரிவிக்கவேண்டுமென்றால், கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னபடி இப்பொழுது எந்த விதமான தடையுத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. இப்பொழுது போடப்பட்டிருப்பதெல்லாம், 'ரெகுலேடரி' ஆர்டர்தான். எதையெதை எப்படியெப்படிச் செய்வது என்று ஒழுங்குபடுத்துகிற ஒரு சட்டம்தான் இப்பொழுது அமலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று போலீசிலே உத்தரவிடப்பட்டிருக்கிறது. போலீசாரிடத்தில், யார் எந்த இடத்தில் ஊர்வலம் நடத்தவேண்டும் என்று கேட்டாலும், பொதுக் கூட்டங்

கள் நடத்த வேண்டும் என்று கேட்டாலும் அதை நடத்துவதால் அமைதிக்கு எந்த விதத்திலும் பங்கம் ஏற்படாது என்று அவர்கள் அறிந்தால், அவைகளுக்கெல்லாம் தாராளமாக அவர்கள் அனுமதி கொடுத்துக்கொண்டு வருகின்றார்கள். இது தனியாகப் போடப்பட்ட சட்டம் அல்ல. இது எந்தவிதமான உரிமையையும் பாதிப்பதாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள், தம்முடைய தீர்மானத்தில், "நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின்கீழ் உள்ள தடையுத்தரவை விவாதிப்பதற்காக" என்ற வகையில் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். அதோடு கூட நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின்கீழ் போடப்படுகிற உத்தரவுகளை விவாதிக்க இப் பேரவைக் கூட்டத்தைத் தள்ளிவைக்கக் கூடாது என்று, பல முறைகள்—எனக்குத் தெரிந்த வரை 12 தடவைகள்—தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 26—6—1952 அன்றைய பேரவைக் கூட்டத்தில் அப்பொழுதிருந்த பேரவைத் தலைவரே "நகர போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் போட்ட உத்திரவுகளைப் பேரவையில் விவாதிக்கக் கூடாது" என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். 17—5—1954-இலும், அதே போல், அப்பொழுதிருந்த பேரவைத் தலைவரும், "நகரப் போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் போட்ட உத்தரவுகளை விவாதிக்கக் கூடாது. அதற்காகப் பேரவைக் கூட்டத்தைத் தள்ளிவைக்கக் கூடாது" என்று தீர்ப்பளித்திருக்கிற காரணத்தால், அதையே நானும் பின்பற்றக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதைப் பின்பற்றி, நகர போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை இங்கே விவாதிப்பதற்காகவென்று இப்பேரவையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்க வேண்டாம் என்று நான் தீர்ப்பு அளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், விதிகளுக்கு முரணான சிற்சில சொற்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சொற்களைப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து, 235-வது விதியின்படி, அகற்றவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறேன் என்பதைப் பேரவைக்கு நான் தெரிவிக்கிறேன்.

அடுத்து, ஓர் அறிவிப்பு . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : "எந்தச் சொற்களை" என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member must not stand while the Speaker is on his legs.

DR. H. V. HANDE : What are the words which the Chair has expunged? It is our right to know it. The Chair must tell us.

1967 நவம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளுக்கு முரணாகக் கூறப்பட்டிருக்கின்ற சொற்களை மட்டும் அகற்றக் கட்டளையிட்டிருக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவையின் நடைமுறை விதி 6-க்கு இணங்க, இக் கூட்டத்தொடரில், மாற்றுத் தலைவர் களாக— ந.ப. 12-00

(1) திரு. வி. எஸ். கோவிந்தராசன்.
(2) திரு. பெ. மலைச்சாமி
(3) திரு. பெ. சௌந்தரபாண்டியன்
(4) திரு. எஸ். முருகையன்
(5) திரு. வை. சுவாமிநாதன்
(6) திரு. வி. கே. கோதண்டராமன்

ஆகியோரை, நான் நியமித்துள்ளேன்.

5. முதலமைச்சரின் அறிக்கை.

போலீஸ் மானிய விவாதத்தில் இளையூர் காங்கிரஸ் உறுப்பினர்கள் கைவிலங்கிடப்பட்டதுபற்றி ஆற்றிய உரை குறித்து விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று இத்தக் கூட்டத் தொடரின் முதல் நாள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முந்திய கூட்டத் தொடரில் 5-7-1967 அன்று ஆற்றிய உரையில் நிகழ்ந்துள்ள பிழை ஒன்றைத் திருத்துவதற்கு, 242-ம் விதிக் கிணங்க நான் அனுமதியளித்துள்ளேன். அத் திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள்.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, during the discussion on Police Demand in the Legislative Assembly on 5th July 1967, Thiru Karuthiruman, Leader of the Opposition, referred to a news-item relating to the handcuffing of certain accused persons and alleging that the accused persons were handcuffed and taken along the road and kept in the lock-up. According to the information then made available to me I informed the House that an incident of this kind, namely taking the accused persons handcuffed, did not occur. I have since obtained more detailed information in the matter and I wish to place the following facts before the House.

A meeting was held on 15th May 1967 sponsored by the D.M.K. Party in order to felicitate Thiru Palanivel Rajan on his election as a Member of this House. Thiru Srinivasan, M.L.A. of Virudhunagar Constituency was addressing the meeting which was presided over by Thiru Thiruvengadam. There was stone